புதிய மொழிகள் மகத்தான கற்பனைகள்

ப்ரதம் புக்ஸ்

ஆண்டறிக்கை 2023 - 24

20 TWENTY YEARS OF PRATHAM BOOKS

நிர்வாக அறிக்கை

குழந்தைகளிடையே கதைகளின் மகிழ்ச்சியைப் பரப்புவதன் மூலம் இரு பதிற்றாண்டுகளாக அர்த்தமுள்ள இருப்பைப் பதிவு செய்திருக்கும் ப்ரதம் புக்ஸுக்கு இது முக்கியமான ஆண்டு. ‘ஒவ்வொரு குழந்தையின் கையிலும் ஒரு புத்தகம்’ என்ற துணிச்சலான நோக்கத்துடன் எளிமையாகத் தொடங்கிய பணி, இன்று கதைசொல்லலின் எல்லைகளை மறுவரையறை செய்கிற, தொழில்நுட்பம் மற்றும் வேகமாக மாறிவரும் சூழலுக்கேற்றவாறு இயங்குகிற ஒரு பெரிய பதிப்பகமாக மலர்ந்துள்ளது.

இரண்டு பதிற்றாண்டுகள் என்ற தடத்தைப் பதித்த பிறகு, எங்களை நாங்களே கேட்டுக்கொள்கிறோம்: ஒரு கதையை நேசிக்க வைப்பது எது? கதையை எப்படிச் சொல்ல வேண்டும்? குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தருவது எது? இக்கேள்விகளுக்கான பதில்களைத் தேடும் முயற்சியில் வெவ்வேறு வடிவங்களில், அதாவது கதைப் புத்தகங்கள், கதைப் படங்கள், வாய்வழிக் கதைகள், கைபேசி - மின்னணு சாதனங்கள் மூலம் என வாசிப்பதற்கும் கேட்பதற்கும் சிறந்த கதைகளை வழங்கிவந்திருக்கிறோம். இவை எல்லாவற்றையும் தாண்டி, நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தும் மற்றோர் அம்சம் என்னவென்றால், கதையானது நன்றாகச் சொல்லப்படும்போது மட்டுமல்ல, மிகவும் நெருக்கமான - பொருத்தமான மொழியில் சொல்லப்படும்போது கூடுதல் நேசிப்புக்குரியதாகிறது.

பொதுவாக ஆங்கிலத்தைத் தவிர நமக்கு இயல்பான ஒரு மொழியில் நாம் சிந்திக்கிறோம், கனவு காண்கிறோம், கணக்கிடுகிறோம். இதனால்தான் நமது கனவுகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்ப தாய்மொழியில் அமைந்த கதைகள் நமக்குத் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும் தன் சொந்தச் சொலவடைகள், பண்பாட்டு நுணுக்கங்கள், எளிதில் அடையாளம் காணக்கூடிய படிமங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மொழியின் உருவகங்களும் குறியீடுகளும் கதைகளுடன் ஆழமான தொடர்பு கொண்டவை. எனவே, சிறந்த உள்ளடக்கம், கதை சொல்லல் முறை என்பவற்றைக் கடந்து குழந்தைகளுக்குப் பொருத்தமான - பழக்கமான மொழிகளைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துகிறோம்.

மொழிபெயர்ப்புகள் குழந்தைகளுக்கான கதைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கும் அதே வேளையில், நல்ல கருப்பொருளுடன் மொழிக்கேற்ற நுணுக்கங்களை வழங்குவதில் சில வரம்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. ஆகையால், வெவ்வேறு மொழிகளில் நூல்களை வெளியிடுவது மட்டுமல்லாமல், குழந்தைகளின் எண்ணங்கள் - கனவுகளுக்கேற்ற மொழிகளில் அசல் படைப்புகளை உருவாக்குவதும் எங்கள் கடமை என்று கருதுகிறோம். இந்தப் பரந்த கதை உலகில் குழந்தைகளின் அனுபவத்தை மேம்படுத்துவதிலேயே எங்கள் மொழி-முதல் தொடர் கவனம் செலுத்துகிறது.

இந்த ஆண்டில், 11 மொழிகளில் நேரடியாக 20 புத்தகங்களும், 10 சுவர் புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறோம். மொழிபெயர்ப்புகளில் கூட, ஆங்கிலத்தின் வழியாக இல்லாமல், ஓர் இந்திய மொழியிலிருந்து மற்றோர் இந்திய மொழிக்கு 8 புத்தகங்கள் மொழிபெயர்த்திருக்கிறோம். போடோ, காஷ்மீரி, நேபாளி உள்ளிட்ட 10 மொழிகளில் 8 மொழிபெயர்ப்புப் பயிலரங்குகள் நடத்தியிருக்கிறோம். மேலும், ஆங்கிலம் அல்லாத இந்திய மொழிகளில் எழுதப்பட்ட புத்தகங்களைச் சேகரிப்பதில் கவனம் செலுத்தியிருக்கிறோம்.

குழந்தைகளுக்கேற்ற - அவர்களுக்குத் தொடர்புடைய - அவர்களின் தாய்மொழியில் அமைந்த கதைகளை இன்னும் இன்னும் தொடர்ந்து வழங்க முன்முயற்சியுடன் இயங்கும் அதேவேளை, முன் எப்போதும் இல்லாத வகையில் தனிப்பயனாக்குதல் - உள்ளூர்மயமாக்குதலுக்கான தளத்தை ஸ்டோரி வீவர் எவ்வாறு வழங்கியுள்ளது என்பதையும் கவனிக்கிறோம்.

இத்தளம் குழந்தைகளுக்கு அவர்களின் சொந்த மொழிகளில் ஏராளமான கதைகளை வழங்கும் வாய்ப்பைத் திறந்துவிட்டிருக்கிறது. குறிப்பாக, மேகாலயாவின் காஸி, கரோ, ப்னார் பழங்குடி குழந்தைகளுக்கான நாட்டுப்புறக் கதைகள், அவுரங்காபாத்தில் உள்ள பள்ளிகளுக்கான உருது படப்புத்தகங்கள், கோவாவில் நடைபெற்ற கொங்கனி - மராத்தி வாசிப்பு நிகழ்வு ஆகியவற்றைச் சொல்லலாம். இன்று, கூட்டுப் பங்களிப்பு - வாசிப்பு நிகழ்வு - பயிற்சி வகுப்புகள் மூலம் 361 மொழிகளில் 60,000 கதைகள் என்று இத்தளம் பன்மொழி வாசிப்பு இயக்கத்தின் மையமாகச் செயல்படுகிறது. இவற்றில் குறைந்த மக்கள்தொகை கொண்ட மொழிகள் 60 சதவீதத்திற்கும் மேல் என்பது முக்கியமானது.

அடுத்த பதிற்றாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் நிலையில், குழந்தைகளை இன்னும் எளிமையாகச் சென்றடையக் கூடிய அளவில் உள்ளடக்கத்தை மாற்றுவதே எங்கள் முயற்சியாக இருக்கும். இதை அடைய மொழி ஒரு முக்கிய வழி.

ப்ரதம் புக்ஸ் குழு மற்றும் அறங்காவலர்கள் சார்பாக,

பேராசிரியர் எம்.எஸ். ஸ்ரீராம்
அறங்காவலர்

பல கதைகள், பல குரல்கள்

புத்தகங்கள் மாயாஜாலமானவை. அறியாத நிலங்களுக்கும் அசாதாரண பரிமாணங்களுக்கும் வாசகர்களை இட்டுச் செல்பவை. அதே சமயம், வாசகர்கள் யதார்த்தத்தை எதிர்கொள்ளவும், அதன் அழகையும் சிக்கலையும் புரிந்துகொள்ளவும் புத்தகங்கள் உதவுகின்றன. வாசிப்புப் பழக்கமாகிட குழந்தைகள் கைகளில் தொடக்க காலகட்டங்களிலேயே புத்தகங்கள் கிடைப்பது முக்கியமானதாகும். வாசகர்களை வாசிப்புலகிற்குள் கரம்பிடித்து அழைத்துச் செல்லக்கூடிய புத்தகங்கள் சுவாரசியமானவையாகவும், பொருள் நிறைந்தவையாகவும், கற்பனை வளத்தோடும் இருக்க வேண்டும். தாய்மொழியில் எழுதப்படும் புத்தகங்கள் குழந்தைகள் புரிந்துகொள்வதற்கு எளிதாக இருக்கும். அத்தகைய புத்தகங்கள் உருவாக்கும் உலகங்கள் உயிர்ப்புள்ளதாக இருப்பதோடு கற்பனைத் திறன் மேம்படவும் வழிவகுக்கும்.

நூலகங்கள் - கல்வியாளர்களுடனான உரையாடல்கள், களப்பணியில் கிடைத்த கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் குழு இந்த ஆண்டு சில திட்டங்களை முன்னெடுத்தது: நேரடி இந்திய மொழிகளில் படப் புத்தகங்கள், சொற்களில்லா புத்தகங்கள், பெண் மேம்பாடு பற்றிய புத்தகங்கள், சமூக - உணர்ச்சி கற்றல், வாய்விட்டு வாசிக்கக்கூடிய நூல்கள்.

கடந்த ஆண்டு எங்கள் குழு மேற்கொண்ட Read with Me போன்ற ஆய்வுகள் வாய்விட்டு வாசிக்கக் கூடிய - தாய்மொழியில் எழுதப்பட்ட நூல்களின் தேவை அதிகரித்திருப்பதை உணர்த்தியது. இந்திய மழலையர் பாடல்களை ஆழ்ந்தறிந்த எங்கள் குழு, மராத்தி, குஜராத்தி, தமிழ், மெய்தெய், மலையாளம், கொங்கனி, கோரா, அசாமி, கன்னடம், வங்காள மொழி ஆகிய பத்து மொழிகள் ஒவ்வொன்றிலும் பத்து மழலையர் பாடல்களை உருவாக்கியுள்ளது. மொழியின் முதல் சித்திரப் புத்தகம் திட்டத்தின் மற்றொரு சிறப்பம்சமாக, லவ்லீன் மிஸ்ரா எழுத்தில் பிரியா குரியன் ஓவியத்தில் வெளியான *'தேர்வு ஜுரம்'* நூலைச் சொல்லலாம். சுவாரசியமான திருப்பங்களைக் கொண்ட கதை அது.

அற்புதமான கலைஞர்களோடு இணைந்து, கதைக்குப் பொருத்தமான சொற் தேர்வுகளையும் சித்திரங்களையும் கொண்ட பல புதிய புத்தகங்களை உருவாக்குவதில் எங்கள் குழு எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

ஓகின் நயம் எழுதிய *'சூரியத் தாய் வீட்டுக்குப் போகும்போது'* சொற்களற்ற புத்தகம். அதில், மேற்கில் மறைந்த பிறகு தன் வீட்டைக் காண வாசகர்களை அழைத்துச் செல்கிறார் சூரியன்.

தாங்கள் கவனிக்கப்படவும் புரிந்துகொள்ளப்படவும் வேண்டும் எனக் குழந்தைகள் ஏங்குகின்றனர். சிக்கலான உணர்வுகளைக் கையாள புத்தகங்கள் அவர்களுக்கு துணைபுரிகின்றன. களத்தில் எழுந்த கோரிக்கையின் அடிப்படையில் உருவான இரு புத்தகங்களை இங்கே குறிப்பிட வேண்டும்: மாதங்கி சுப்ரமணியன் எழுத்தில், ப்ரொயீட்டி ராய் ஓவியத்தில் உருவான ஒளி நிறைந்த மனம்; யாமினி விஜயன் எழுத்தில், அய்ந்திரி சி ஓவியத்தில் உருவான வளரலாம் வாங்க. இவற்றில் ஒளி நிறைந்த மனம் புத்தகம், குழந்தைகள் மீதான பெற்றோரின் உணர்வுத் துன்புறுத்தல் என்ற அதிகம் பேசப்படாத விசயத்தைப் பதிவு செய்திருக்கிறது. பருவமடைதலின் சிக்கலான காலகட்டம் பற்றி இளம் வாசகர்களுக்கு சுவாரசியமாகவும் விளக்கமாகவும் சொல்கிறது வளரலாம் வாங்க நூல்.

இயற்கையோடோ சக மனிதர்களோடோ நீடித்த உறவை வளர்த்துக்கொள்வதென்பது குழந்தைப்பருவத்தின் முக்கியக் கட்டம். ஷப்னம் மின்வாலா எழுதி, பிரின்சி ராவத் ஓவியம் வரைந்த *இது நியாயமில்லை,* பொறாமையையும் நட்பையும் பேசுகிறது. ஹிமஞ்சலி சங்கரின் எழுத்திலும் அதிதி ஆனந்தின் ஓவியங்களிலும் உருவான நினைவிருக்கிறதா பாட்டி, அல்ஸைமர் நோயால் பாதிக்கப்பட்ட பெண் உட்பட மூன்று தலைமுறை பெண்கள் மூலம் நினைவுகளையும் உறவுகளையும் பற்றிய கதையாகும்.

யுவன் ஏவ்ஸ் எழுதி, ரேஷு சிங் வரைந்த ஆமை ஓட்டு வண்டு நூல், சிறந்த கற்றல் இடமான இயற்கையோடு இயைந்த வாழ்விற்குகந்த வழியைக் கண்டறியும் சிறுவனைப் பற்றிய உணர்ச்சிகரமான கதை. நாசா வெளியிட்ட விண்வெளி

புகைப்படங்களின் தாக்கத்தில் அபர்ணா கபூர், பிஜல் வச்சாரஜனி இருவரும் எழுதிய *விண்வெளி விதிகள்,* விண்வெளி பயணத்தின்போது செய்வன, செய்யக் கூடாதன பற்றிய எளிமையான – தத்துவார்த்தமான வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. கனாட்டோ ஜிமோ இதற்கான ஓவியங்களை வரைந்திருக்கிறார்.

சமூகம், நட்பு இரண்டும்தான் இவ்வாண்டு வெளியான குறிப்பிடத்தக்க நூல்களின் கருப்பொருள்களாக உள்ளன. சௌம்யா ராஜேந்திரன் எழுதி, பார்வதி சுப்ரமணியன் வரைந்த *இணைபிரியா இம்சைகள்,* நாம் நம் இயல்பில் இருப்பதை ஏற்றுக்கொள்ளும் நட்புறவுகளைப் பற்றிய கதை. அதேபோல், மேனகா ராமன் எழுதி, க்ருத்திகா சுசர்லா வரைந்த சுதந்திரச் சகோதரிகள் நூல், இசை மீதான தன் ஆர்வத்தைக் கைவிடாத பயோஷ்னியின் கதையை நகைச்சுவையோடு கூறுகிறது.

20 ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கும் ப்ரதம் புக்ஸின் புத்தகப் பட்டியல் சொற்களாலும் சித்திரங்களாலும் அமைந்த கதைகளின் புதையல். வேகமாக மாறிக்கொண்டிருக்கும் உலகத்துடன் இணைந்து செல்லும் நம் முயற்சி புத்தகப் பட்டியலிலும் எதிரொலிக்க வேண்டும் என்று கருதிய நம் குழு, சில பழைய புத்தகங்களைச் சமகால வாசகர்களுக்கேற்றவாறு மறு வடிவமைப்பு செய்தது. அவற்றில் சில: ருக்மணி பேனர்ஜி எழுத்தில், பபிகி ஓவியத்தில் உருவான *'என் வீடு', 'என் நண்பர்கள்'*; காான்சன் பேனர்ஜி எழுத்தில் கபினி அமீன் வரைந்த *My Sister and Me,* மீரா டெண்டுல்கர் எழுதி, பல்லவி சின்ஹா வரைந்த *'மஜி பட் ஹரவ்லி', 'மஜி பட் சபட்லி'*; சஞ்சீவ் ஜெய்ஸ்வால் எழுதி, தஸ்னீம் அமிருத்தீன் வரைந்த *'பர்ஸா பாதல்'.*

கடந்த ஆண்டு ப்ரதம் புக்ஸுக்கும் சிங்கப்பூர் புத்தக மன்றத்தின் ஆசிய குழந்தைக் கதைத் திருவிழா சார்பாக நடைபெற்ற Build Your Book Hackathon நிகழ்வுக்கும் மற்றுமொரு வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது. இண்டு நாட்கள் நடந்த மெய்நிகர் நிகழ்வில் இந்தியா, நேபால், சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பங்கேற்றன. ஐந்து மொழிகளில் (இந்தி, தமிழ், சீனம், வியட்நாமியம், மலாயா) ஆறு வரைகலை கலைஞர்கள் தலைமையில் 36 புத்தகங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு புத்தகமும் அதிசயம் – ஆர்வம் – பன்முகம் என நம்முடைய கருத்துகளைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது.

அந்நிகழ்வில் சொற்களற்ற புத்தகங்கள் குறித்தும் பன்முகத்தன்மை குறித்தும் நம் குழு ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது. மதிப்புமிக்க சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்திலும் சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்திலும் 'நாம் வாழும் உலகம், நாம் உருவாக்கும் சொற்கள்' என்ற தலைப்பில் இணையவழியில் நம் குழு உரையாற்றியது.

சிரிஷ்டி மணிபால் கலை வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுடனும் ATREE பணியாளர்களுடனும் எங்கள் குழு படப்புத்தகங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்துக் கலந்துரையாடியது.

பொறுப்பாசிரியர்கள் ஷினிபலி மித்ரா ஸைகல், ராதிகா ஷெனாய் இருவரும் இணைந்து NISSEM அமைப்புக்காக வாழ்க்கை வரலாறுகளின் தாக்கம் பற்றிய ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

படம் 1: *நீவ் புக் விருதுவென்ற சதாஃப் சித்திக், ஹபீப் அலியுடன் ப்ரதம் புக்ஸ் குழுவினர்*

படம் 2: *ஆர்ட்ரீ பெங்களூருவில் நடந்த பயிற்சிப் பட்டறையில் ப்ரதம் புக்ஸ் பதிப்புக் குழுவினர்*

படம் 3: *2023 AFCCயில் பங்கேற்ற பதிப்பாசிரியர் ஸ்மித் சாவேரி, கலை இயக்குநர் கனாட்டோ ஜிமோவின் நோட்டுப் புத்தகம்*

படம் 4: *புகாரு பரோடாவில் கலை இயக்குநர், விருதுவென்ற ஓவியரான கனாட்டோ ஜிமோ*

படம் 5: *அழகியைக் காணவில்லை புத்தகத்துக்காக பினோத் கனோரியா விருதுபெறும் ப்ரியா குரியன்*

படம் 6: *ஸ்ரிஷ்டி ஆர்ட், டிசைன், டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட் மாணவர்களுக்கான படப்புத்தக உருவாக்கம் பயிற்சிப் பட்டறை*

விருதுகள்



Beauty is Missing

Mehlli Gobhai Children's Book Illustrator of the Year 2023

FICCI India Publishing Awards, Children's Book of the Year



When We Are Home

Atta Galatta-Bangalore Literature Festival 2023:
Best Children's Picture Book Story

Our Beautiful World

Publishing Next Industry Awards 2023:
Children's Book of the Year: 8+ Winner

விருதுகள்

Hello, Sun!

The Federation of Indian Publishers Awards for Excellence in Book Production 2023: Children Books, General Interest, 0-10 Years, Regional Languages- Tamil: Second Prize

My Street

Neev Book Award: Early Readers

Nirali Dadi

Room to Read Children's Literature Awards 2023:
Teacher-Librarian's Choice Award (3-8 years): Runner up

விருதுகள்

Gappu Gola

Room to Read Children's Literature Awards 2023:
Picture Book of the Year

Muft Ki Kulfi

Room to Read Children's Literature Awards 2023:
Young Author of the Year Runner up

Laal Pari

Room to Read Children's Literature Awards 2023:
Teacher-Librarian's Choice Awards (8-12 years): Runner up

கஹானி, கதா, காஹினி, கிஸ்ஸா மற்றும் பல

580க்கும் மேற்பட்ட புத்தகங்கள்

11க்கும் மேற்பட்ட மொழிகளில்

4 மொழிகளில் நேரடிப் புத்தகங்கள்

பன்மொழி பதிப்பாளராக, இந்திய மொழி குழந்தைகள் பதிப்புச் சூழலை மேம்படுத்தும் வகையில் செயல்பட்டிருக்கிறோம். இந்த ஆண்டு எங்கள் புத்தகப் பட்டியலை கூடுதல் மொழிகளில் விரிவுபடுத்தியிருக்கிறோம்; மொழிபெயர்ப்புகளுக்கான நிதியைத் திரட்ட பல்வேறு வழிகளைக் கண்டறிந்திருக்கிறோம்; நேரடி இந்திய மொழிப் புத்தகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறோம்; இந்திய மொழிகளுக்கு இடையில் நேரடி மொழிபெயர்ப்புகளையும் செய்கிறோம்.

Fidelity Projectகாக 11க்கும் மேற்பட்ட மொழிகளில் மொத்தம் 500 புத்தகங்களை உருவாக்கியிருக்கிறோம். காஷ்மீரி, நேபாளி மொழி, போடோ, உருது, மணிப்பூரி ஆகிய மொழிகளும் இதில் அடக்கம். மொழிபெயர்ப்பின் நுட்பமான - படைப்பாக்க அம்சங்கள் குறித்து மொழிபெயர்ப்பாளர்களுடன் இணைய வழி உரையாடலை மேற்கொண்ட எங்கள் குழு, அதன் மூலம் மொழிபெயர்ப்பின் தரத்தை உயர்த்தியது.

இந்தியாவின் ஏழு மாநிலங்களில் உள்ள 27 இலட்சம் மக்களின் பூர்வீக மொழி கோண்டி. அம்மொழியில் வெளியான படப்புத்தகங்கள் கோண்டி குழந்தைகளின் வாசிப்பு பழக்கத்தை வளர்த்ததுடன், வகுப்பறை பாடங்களை எளிமையாகப் புரிந்துகொள்ளவும் உதவியிருக்கின்றன. ஷிக்ஸார்த் அறக்கட்டளையுடன் இணைந்து 100 கோண்டி புத்தகங்களை உருவாக்கியிருக்கிறோம். சத்திஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குழந்தைகளையும் இப்புத்தகங்கள் சென்றடைகின்றன.

வடகிழக்குப் பகுதிகளின் கதைளை படப்புத்தகங்களாக உருவாக்கும் எங்கள் பெரும் வேலைதிட்டத்தின் ஒரு பகுதியாக, வடகிழக்கு எழுத்தாளர், ஓவியர்களால் உருவாக்கப்பட்ட 20 புத்தகங்கள் அசாமிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. தேசிய மொழிபெயர்ப்புத் திட்டத்துடன் இணைந்து மேற்கொண்ட இப்பணிக்கு ஹெச்.டி.பாரெக் அறக்கட்டளை நிதி நல்கியது.

அழிந்துவரும் மொழிகளான அகா ஹ்ருஸோ, சிங்ஃபோ இரண்டிலும் 5 கதை அட்டைகளை மொழியெர்த்திருக்கிறோம். இத்திட்டத்தை ஒருங்கிணைத்த எழுத்தாளர் நபநிதா தேஷ்முக் உடன் சேர்ந்து அச்சமூகங்களைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர்களாலும் விமர்சகர்களாலும் இக்கதை அட்டைகள் மொழிபெயர்க்கப்பட்டன.

மொழிபெயர்ப்புகளை அதிகப்படுத்தும் முயற்சியின் தொடர்ச்சியாக, வடகிழக்கு மொழிகளுக்குப் புத்தகங்களை மொழிபெயர்க்கும் நோக்கில் முதல் முறையாக திரள்நிதி பிரச்சாரத்தை மேற்கொண்டோம். பதின்பருவ குழந்தைகளுக்குத் தங்கள் உடல் குறித்து எழும் கேள்விகளை மையப்படுத்திய ***வளரலாம் வாங்க,*** குடும்பத்திற்குள் நிலவும் பாலின ஏற்றத்தாழ்வுகளை நகைச்சுவை பாணியில் கேள்விக்குட்படுத்தும் *சேலை கட்டிய அப்பா* ஆகிய நூல்கள் அசாமிய, போடா மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

தாய் மொழியில் படிப்பதனால் குழந்தைகள் புத்தகங்களோடு நெருக்கமாகிறார்கள். அது அவர்களின் புரிந்துகொள்ளும் திறனை வளர்த்து, பள்ளியிலும் சிறப்பாகச் செயலாற்ற உதவுகிறது. குழந்தைகளுக்கான புத்தகங்கள் ஆங்கிலம் அல்லாத இந்திய மொழிகளுக்குள் மொழியாக்கம் செய்யப்படுவது மிகவும் அரிது. அதனால் இந்த ஆண்டு அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். எங்களது மொழிக்கு மொழி நேரடி மொழிபெயர்ப்பு திட்டம், ஒரு மொழியின் அசலான குரல்களைப் பல்வேறு மொழிக்குக் கடத்துவதில் பெரும் உதவி புரிந்தது. இந்த ஆண்டு இந்தியில் எழுதப்பட்ட புத்தகங்கள் நேரடியாக மராத்தி, கன்னடம், தமிழ் ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டன.

இப்பணியில் நாங்கள் மூத்த மொழிபெயர்ப்பாளர்களுடனும் சாகித்ய அகாதமி விருது பெற்றவர்களுடனும் இணைந்து செயலாற்றினோம். ஜெயந்த் கைகினி அவர்களால் கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கோவக்கார இட்லி அதற்கொரு சான்று.

தொடர்ந்து உயர்தரத்திலான அசல் மற்றும் மொழிபெயர்ப்பு புத்தகங்களைத் தருவதற்குச் செம்மைப்படுத்தலும் சிறந்த நடைமுறைகளைப் புரிந்துகொள்ளுதலும் முக்கியம். மன்ச்சி புஸ்தகம், மோகன் பதிப்பகா, நேஷனல் புக் டிரஸ்ட் ஆகிய பதிப்பகங்களோடு இணைந்து எங்கள் தெலுங்கு மொழிபெயர்ப்பாளர்களுக்கு இணைய அமர்வுகளை ஒருங்கிணைத்தோம். அதன்மூலம் தெலுங்கு மொழிபெயர்ப்புக்கான வரையறைகள் உருவாக்கப்பட்டன.

எங்களது நேரடி இந்தி புத்தகங்கள் பல விருதுகளைப் பெற்றுள்ளன. அலங்கிரிதா அமயா **रंग बिरंगी किताब** புத்தகத்துக்காக ரூம் டு ரீட் (Room to Read) அமைப்பின் சிறந்த எழுத்தாளர் விருது பெற்றுள்ளார். விஷ்ணு எம். நாயர் **गप्पू गोला**. **निराली दादी** புத்தகத்துக்காக ரூம் டு ரீட் (Room to Read) அமைப்பின் சிறந்த ஓவியர் விருதும், நூலகர் தேர்வு விருதும் பெற்றுள்ளார்.

நாங்கள் தேசிய-மாநில அளவிலான நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளோம். அவற்றில் சில: 'தேசிய புத்தக மேம்பாட்டிற்கான வழிகாட்டுதல்களை உருவாக்குதல்' என்ற தலைப்பில் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) ஒருங்கிணைத்த பயிலரங்கு; புனேவில் பாஷா அறக்கட்டளை நடத்திய இலக்கியத் திருவிழா; Christ பல்கலைக்கழகமும், மத்திய இந்திய மொழிகள் நிறுவனமும் ஒருங்கிணைத்த தேசிய மொழிபெயர்ப்பு கருத்தரங்கு; கன்னட நாளிதழான விஜய கர்நாடகா ஒருங்கிணைத்த கன்னடத்தில் குழந்தைகள் புத்தகங்கள் குறித்தான விவாத அமர்வு.

“எங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு ப்ரதம் புக்ஸ் புத்தகங்கள் மிகவும் பிடித்திருந்தன. இந்தப் புத்தகங்கள் எங்கள் வாசிப்பு நேரத்தைச் சுவாரஸ்யமாக்கியுள்ளன. இந்தி படப் புத்தகங்கள் உருவாக்கியுள்ள இந்த உலகம் எங்கள் குழந்தைகளுக்கு மிகவும் புதிது. வெவ்வேறு வாசிப்பு நிலைகளின் அடிப்படையில் குழந்தைகள் தங்களுக்கான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கிறார்கள். குழந்தைகள் தங்களுக்கு ஏற்ற கதைகளையும் புத்தகங்களின் மொழியையும் கண்டுபிடித்தனர்.”

கீதா ராணி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்,
சர்வோதயா கன்யா வித்யாலயா, மோலார்பந்த்.

படம் 1: *கர்நாடகாவின் சீர்சி போன்ற தொலைதூர கிராமங்களில் சிராந்தனா ரங்க ஆத்யாயன கேந்திர கிரணின் நிறுவனர் கிரண் பட் கதை வாசித்து உரையாடினார்*

படம் 2: *குழந்தைகள் முதல்முறையாக படப்புத்தகங்களைப் பார்த்தனர். வீட்டுக்கு மகிழ்ச்சியாக எடுத்துச் சென்றனர், புத்தகங்களைப் பற்றி எழுதியும் வரைந்தும் காட்டினர்*

படம் 3: *மொழிபெயர்ப்பாளர் வாணி பெரியோடி முகமூடி கதையை கர்நாடகாவின் கொப்பலா மாவட்டத்தில் நடந்த சம்மர் கேம்ப்பில் வாசித்தார்.*

படம் 4: *டெல்லியில் சர்வோதய கன்யா வித்யாலயாவில் மூன்றாம் வகுப்பு குழந்தைகள் வகுப்பறை நூலகத்தை ஆர்வமாகப் பார்த்தனர்*

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கதை

~2 கோடி வாசிப்புகள்,

361 மொழிகள்,

60,300 கதைகள்

PRATHAM BOOKS storyweaver

“புத்தகங்கள் சிலசமயம் உண்மையான அல்லது கற்பனையான, நன்கறிந்த அல்லது புதிதான உலகங்களைக் காணச் செய்யும் சாளரங்களாக இருக்கின்றன. மேலும், அவை கண்ணாடிக் கதவுகளாகவும் இருக்கின்றன. வாசகர்கள் அவை வழியே சென்று எழுத்தாளர்கள் உருவாக்கியிருக்கும் உலகில் சஞ்சரிக்கிறார்கள்.” முனைவர் ருடின் சிம்ஸ் பிஷப்பின் பிரபலமான இக்கூற்றை மனதில் கொண்டு, வாசிப்பின்பத்தை அதிகப்படுத்தவும்; அடிப்படை இலக்கிய அறிவை வளர்த்துக்கொள்ளவும்; இந்தி, மராத்தி, உருது, ஒடியா உள்ளிட்ட மொழிகளைச் சேர்ந்த இளம் வாசகர்களின் அறிவியல் ரீதியான சிந்தனை முறையை (STEM) கட்டமைக்கவும் கதை சார்ந்த திட்டங்களை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். கதை சார்ந்த கற்றல் அணுகுமுறையில், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறோம். அது தொடர்ந்து நல்ல முடிவுகளை தந்துள்ளது. அறிவியல் அணுகுமுறை (STEM) எழுத்தறிவு திட்டத்தோடு இணைந்து ராஜஸ்தானின் கோட்டா நகரத்தில் உள்ள 30 பள்ளிக்கூடங்களில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் மாணவர்களின் மதிப்பெண்கள் 33 சதவீதம் அதிகரித்திருப்பதைக் கண்டறிந்தோம்.

கல்வித் துறையோடு இணைந்து செயல்படுத்தும் இத்திட்டங்களுக்கு ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நல்ல வரவேற்பு இருக்கிறது. துல்ஜாபூர் தாலுகா தாஹிவாடி கிராமத்தில் உள்ள ஸிலா பரிஷத் பள்ளியில் பணிபுரியும் செல்வி. சவிதா சதே, “என்னுடைய வகுப்பில் குறைந்த மதிப்பெண்கள் கொண்ட மாணவர்கள் கூட கதைப் புத்தகங்களைக் கொண்டாடுவதையும், அவற்றை வாசிக்க ஆர்வத்துடன் கை தூக்குவதையும் பார்த்தேன்” என்று அடிப்படை எழுத்தறிவு திட்டத்தின்போது தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF), மகாராஷ்டிரா கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம் (MSCERT) இரண்டுடனும் இணைந்து உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், கோவா ஆகிய மாநிலங்களில் மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி 4,50,000 குழந்தைகளின் கற்றல் திறனை வாசிப்புப் பழக்கத்தின் மூலம் மேம்படுத்தியிருக்கிறோம்.

தாய்மொழியில் வாசிப்பு பழக்கத்தை அதிகப்படுத்த கூட்டு முயற்சி இன்றியமையாதது. நீண்டகாலமாக எழுத்தாளர்களும், ஓவியர்களும், மொழிபெயர்ப்பாளர்களும், கல்வியாளர்களும், பெற்றோர்களும் கூடி, வாசிப்பின்பத்தை வளர்த்துக்கொள்ளும் தளமாக இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்டோரிவீவர், வாசிப்புப் பழக்கத்தைப் பல்வேறு வழிகளில் சாத்தியப்படுத்த தேசிய அளவிலான ஓர் இயக்கத்தைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்திவருகிறது.

அந்தவகையில், உலக கதைசொல்லும் தினத்தன்று (20 மார்ச், 2023) ‘குழந்தைகளை வாசிக்க வையுங்கள்’ (#GetChildrenReading) எனும் பிரச்சார இயக்கத்தைத் தொடங்கி, வாரந்தோறும் பெரியவர்கள் குழந்தைகளுக்குச் சத்தமாகப் படித்துக் காட்டுமாறு ஊக்கப்படுத்தினோம். வாசிப்புப் பழக்கமானது சுவாரசியமாகவும் அனைவரும் அணுகக்கூடிய வகையில் இருக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைப் புத்தகங்கள் உள்ளிட்ட வசதிகளை அமைத்துக் கொடுத்தோம். ஆயிரக்கணக்கானோர் வாராந்திர அமர்வுகள் நடத்தி, சில சிக்கலான கற்றல் பிரச்சினைகளுக்கு மக்களின் ஒத்துழைப்போடு தீர்வுகளைக் கண்டடைந்துள்ளனர். அதில் ஒன்று, செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அமெரிக்கச் சைகை மொழியின் ஒலி - காட்சி முறைகளைப் பயன்படுத்துவது. சொற்களுக்கு உயிர்கொடுப்பதன் மூலம் வாசகர்களை வளர்ப்பவரும், புத்தகச் சங்கங்களில் குழந்தைகளுக்கு வாசித்துக் காட்டுபவருமான ‘AA’s Book Nerds’இன் நிறுவனர் அர்ச்சனா ஆத்ரி, “ப்ரதம் புக்ஸின் ‘குழந்தைகளை வாசிக்க வையுங்கள்’ பிரச்சார இயக்கத்தின் அடித்தளமே இதுதான் என்று தோன்றுகிறது. குழந்தைகளுக்கு வாசித்துக் காட்டுவது, அவர்களோடு வாசிப்பது, அவர்களுக்கு வாசிப்பின் இன்பத்தைக் கைகாட்டுவது, புத்தக உலகிற்குள் அவர்களைச் சுதந்திரமாக உலவ விடுவது” என்றார்.

இறுதியாக, அனைத்துச் சமூகங்களுக்கும் அவரவர் தாய்மொழிகளில் புத்தகம் வெளியிட ஸ்டோரிவீவர் சமவாய்ப்பு அமைத்துத் தரும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்தவகையில், சௌரமண்டலாவின் மறக்கப்பட்ட நாட்டுப்புறக் கதைகள் திட்டத்தோடு இணைந்து, மேகாலயா மாநிலத்தின் மரபார்ந்த நாட்டுப்புறக் கதைகளை 45 படப்புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம். இது மற்றுமொரு பதிப்பாக்க முயற்சி அல்ல, தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டுவரும் கதைகளை ஆவணப்படுத்தும் சமூகச் செயல்பாடு. இது காசி, கோரா, நார் பழங்குடிச் சமூகங்களின் கதைகளை உள்ளடக்கிய உள்ளூர் நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பு. பாரம்பரிய உடைகளைக் காட்சிப்படுத்தும் ‘The Garment series’ நூலின் ஒவ்வொரு பக்கமும் மேகாலயா மக்களின் கைவண்ணத்தைப் பறைசாற்றும். அதேபோல், வான்கென் கிராமத்தில் தனது தனித்துவமான இசையைத் தேடிப் பயணிக்கும் குழந்தையின் கதையைச் சொல்லும் நிதா ஹைனிவ்தா எழுதிய - அர்பன் மாவ்தோ வரைந்த ‘Ban’s Journey in Music’ நூல், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வசீகரிக்கக் கூடியது. மேகாலயாவின் பல்வேறு பறவையினங்கள் பற்றிய இருமொழி புத்தகங்கள், மொழிநடையில் இயற்கையை இணைத்து மலைநிலத்தின் அழகை காலத்துக்கும் சொற்களில் அடைத்துவைக்கும் சிறப்பைக் கொண்டிருக்கின்றன. சௌரமண்டலா அமைப்பினால் பயனடைந்த குழந்தைகள், தங்கள் சமூகத்தின் முதல் எழுத்தாளர், ஓவியர் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். மிகப் பெரிய சமூக மாற்றங்கள் பிரமாண்ட செயல்களால் மட்டும் நிகழ்வதில்லை, சில சமயம் உங்களின் எளிய கதையைச் சொல்வது கூட அதற்குப் போதுமானதாக இருக்கிறது என்பதை ‘மறக்கப்பட்ட நாட்டுப்புறக் கதைகள் திட்டம்’ நிரூபித்திருக்கிறது.

இதுதான் இந்த ஆண்டில் எங்கள் இணைய செயற்களத்தின் கதை. உருவாக்கி, மொழிபெயர்த்து, அனைவருக்கும் கிடைக்கச் செய்து, பங்குதாரர்களோடு இணைந்து பணியாற்றி வாசிப்பு பழக்கத்தை வளர்த்து, இறுதியாக, ஒவ்வொரு குழந்தையின் கைகளிலும் அவரவர் தாய்மொழியில் எழுதப்பட்ட புத்தகம் இருப்பதன் மகிழ்ச்சியை உணர வைக்கிறோம்.



படம் 1: *உருதுவில் #GetChildrenReading கேம்பெயினில் குழந்தைகள் பங்கேற்றனர்*

படம் 2: *ஸ்டோரிவீவரில் சௌரமண்டலா மறக்கப்பட்ட நாட்டுப்புறக் கதைத் திட்டத்தின் புத்தகங்கள்*

படம் 3: *கோட்டாவில் பயன்படுத்தப்படும் ஸ்டெம் லிட்ரசி ப்ரோக்ராம்*

படம் 4: *கோட்டா ஸ்டெம் லிட்ரசி ப்ரோக்ராமில் பங்கேற்கும் ஆசிரியர்கள்*



சொற்களின் வலிமை

PRATHAM BOOKS
donate-a-book

2.1 இலட்சம் குழந்தைகளைச் சென்றடைந்திருக்கிறோம்

41 ஆயிரம் புத்தகங்கள் – கதை அட்டைகள்

800க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள்

தனிநபர்கள், தொண்டு நிறுவனங்கள், நூலகங்கள், அமைப்புகள் ஆகியவற்றை இணைத்து திரள்நிதி மூலம் அதிகம் குழந்தைகளுக்கு கதைப் புத்தகங்களை வழங்கும் எங்கள் முயற்சியில் இந்த ஆண்டு மகத்தான வெற்றியடைந்திருக்கிறோம். எங்கள் புத்தகங்கள் பல்வேறு மொழிகளில், அதிக வசதிகளற்ற பகுதிகளில் உள்ள குழந்தைகளைக் கூட சென்றடைந்திருக்கின்றன. அவற்றின் வழியாக அதிசயங்கள், கொண்டாட்டங்கள் நிரம்பிய ஓர் உலகைக் குழந்தைகளுக்கு அளித்திருக்கிறோம். இதை மீண்டும் மீண்டும் செய்வோம்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லையோரத்தில் அமைந்துள்ள ஊரி நகரத்தில் சுற்றி பனிமலைகளும் நதியும் சூழ இருக்கும் சம்பூர் பட்டன் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியிலும் அருகமை பள்ளிகளிலும் முதன்முறையாக நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. தங்கள் தாய்மொழி உருதுவில் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ள கதைப் புத்தகங்களைக் கண்டதிலும் படித்ததிலும் குழந்தைகள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

அடுத்த தலைமுறையான குழந்தைகளுக்குச் சிறந்த சூழலை உருவாக்குவதில் நம் அனைவருக்கும் பங்குண்டு. அந்தவகையில் ப்ரதம் புக்ஸ் தங்கள் பங்கைச் செய்வது பாராட்டத்தக்கது, மகிழ்ச்சியானது. பல்வேறு கருப்பொருள்களில், மொழிகளில் அவர்கள் குழந்தைகள் புத்தகங்களை உருவாக்குவது வரவேற்கத்தக்கது. இப்டிடா (Ibtida) போன்ற முன்னெடுப்புகள் மக்களை ஒன்றிணைத்து, குழந்தைகளுக்கான சிறந்த சமூகத்தை உருவாக்கும்.’

மேஜர் அபிலாஷ் ஷர்மா, 16வது படைப்பிரிவு, ராஜ்புதன ரைஃபில்ஸ்.

யுகாடாபுல்ட் பவுண்டேஷனின் (UCatapult Foundation) நிறுவனர் பிரேமா மிஸ்ரா, மகாராஷ்டிராவின் ஜல்கோன் மாவட்டத்திலுள்ள தரங்கோன் கிராமப் பள்ளிக்கூடங்களுக்கு STEM பாடத்திட்ட நூல்களை வழங்குவதற்காக நிதி திரட்டியுள்ளார். ஏற்கெனவே உள்ள பாடத்திட்டத்தோடு கவனமாக ஒருங்கிணைக்கப்பட்ட இப்புத்தகங்கள், STEM கருத்துகளை / பாடங்களை எளிமையாக - ஆர்வமூட்டக் கூடியதாக



ஆக்குகின்றன. மேலும், STEM கற்றல் முறையின் முக்கியத்துவத்தைத் தலைமை ஆசிரியர்களுக்கு விளக்கும் அமர்வுகளிலும் இப்புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அருணாச்சல பிரதேசம், புல்யி கிராமம், முவ்யா பகுதியில் உள்ள நியுபு நிய்வகம் யெர்கோ பள்ளிக்கூடத்தின் மாணவர்கள் கதைப்பத்தகங்கள் பெற்றதில் மகிழ்ச்சியடைந்தனர். அதற்காக டோன்யி போலோ கலாச்சார தொண்டு அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அப்பகுதி பழங்குடி சமூகங்களின் மரபுகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் 2022இல் இப்பள்ளியை நிறுவிய டோன்யி போலோ அறக்கட்டளை, நியிஷி பழங்குடி மாணவர்களுக்குக் கல்வியளிக்கிறது.

மணிப்பூரில் நிலவும் அசாதாரண சூழல், பல மாணவர்களை நிவாரண முகாம்களில் தஞ்சமடைய வைத்தது. அங்கு அவர்களுக்கு எந்தப் புத்தகமும் கிடைப்பதில்லை. லம்கா, மணிப்பூர் உள்ளிட்ட பல்வேறு முகாம்களில் வசிக்கும் இடம்பெயர்ந்த குழந்தைகளுக்காகச் சமூக முன்முயற்சி மையத்தை உள்ளடக்கிய சமூக கல்வி நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. இந்தக் கடினமான காலத்தில் இலக்கியம் - புத்தகம் தொடர்பான செயற்பாடுகளில் குழந்தைகளை ஈடுபாட்டுடன் வைத்திருக்க ப்ரதம் புக்ஸின் கதைப் புத்தகங்கள் உதவியாக இருக்கின்றன.

படம் 1: *அருணாச்சல பிரதேசத்தின் முவ்யாவில் நியூபு நியூவ்காம் குழந்தைகளுக்கான புத்தகங்கள்*

படம் 2: *மணிப்பூரில் லம்காவில் இடம்பெயர்க்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆதரவு*

படம் 3 & 4: *காஷ்மீர் பள்ளத்தாக்கின் முதல் நூலகம் ஊரி பகுதியின் சம்பூர் பட்டானில் அமைக்கப்பட்டது*

படம் 5: *ஜல்காவ்ன் மாவட்டத்தில் தரன்காவ்ன் குழந்தைகளுக்கான ஸ்டெம் புத்தகங்கள்*

கதைகளுக்கு இறக்கைகளைக் கொடுத்தல்

~15 இலட்சம் புத்தகங்கள்

50 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள்

6400 “வகுப்பறையில் ஒரு நூலகங்கள்” அமைக்கப்பட்டிருக்கின்றன

27 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள்

245 க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள்

புத்தகங்கள் கிடைக்கச் செய்தல் என்பது எங்களின் முதன்மை நோக்கங்களில் ஒன்று. அதன்படி எங்கள் குழு மொழி கடந்து நிலங்களைக் கடந்து ஒவ்வொரு குழந்தையின் கையிலும் ஒரு புத்தகத்தைக் கொடுக்க உழைக்கிறார்கள். எங்கள் புத்தகங்கள் புதிய புதிய இடங்களைச் சென்றடைய வைப்பதிலும் அதன் மூலம் இன்னும் அதிக குழந்தைகள் - கல்வியாளர்களுடன் உறவாடுவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். அந்தவகையில், தொடக்கத்தில் நாங்கள் ஈடுபாடு காட்டாத, இப்போது அழிந்துகொண்டிருக்கக் கூடிய நிலையில் அல்லது மிகக் குறைந்த நபர்கள் பேசும் மொழிகளில் புத்தகங்களையும் கதை அட்டைகளையும் உருவாக்கியிருப்பது முக்கியமான சாதனை.

அழிந்துகொண்டிருக்கும் மொழிகளான அகா ஹ்ருஸோ, சிங்போ ஆகியவற்றில் 3500 கதை அட்டைகளை அச்சடித்து விநியோகித்திருக்கிறோம். அருணாச்சல பிரதேசத்தில் உள்ள 4000 பேர்தான் அகா ருஸோ மொழியைப் பேசுகிறார்கள். போலவே, அசாமில் உள்ள 3000 பேர் மட்டும்தான் சிங்போ பேசுகிறார்கள்.

சத்திஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் தொண்டாற்றும் ஷிக்ஸார்த் அறக்கட்டளையுடன் இணைந்து முதன்முறையாக கோண்டி மொழியில் 92 புத்தகங்களை வெளியிட்டுள்ளோம். “வகுப்பிறையில் ஒரு நூலகம்” திட்டத்தில் 266 கோண்டி புத்தகங்களை பரவலாக்கியிருக்கிறோம்.

எங்கள் 20வது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக, ‘Joy in a Box’ என்ற புதிய தயாரிப்பை அறிமுகப்படுத்தினோம். ஆங்கிலம், இந்தி, மராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் 1600 புத்தகப் பெட்டித் தொகுப்புகளை வெளியிட்டோம்.

‘தொடக்கநிலை வாசகர்களின் நூலகம்’ (Early Learner’s Library) திட்டத்தின் கீழ் ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய ஆறு மொழிகளில் 60 புத்தகங்களை வழங்கினோம்.

நாடு கடந்து குழந்தைகளுக்குப் புத்தகங்களையும் கற்றல் பொருட்களையும் நம்மோடு இணைந்து வழங்குவதற்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள்.

காரிடாஸ் இந்தியா அமைப்பின் குஷால் பச்பன் திட்டத்துடன் இணைந்து மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் கிராமப்புறங்களைச் சேர்ந்த 4,173க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு எங்கள் புத்தகங்களைக் கொண்டு சேர்த்திருக்கிறோம். மேலும், கற்பிப்பதற்கும் தங்கள் அறிவை மேம்படுத்திக்கொள்வதற்கும் எங்கள் புத்தகங்களைப் பயன்படுத்தியதன் மூலம் 85க்கும் மேற்பட்ட கல்வி வழிகாட்டிகளின் திறன்களை மெருகேற்றியிருக்கிறோம்.

Bal Chaupals எனப்படும் குழந்தைகள் செயற்பாட்டு மையத்தைப் போலவே ப்ரதம் புக்ஸின் தொங்கு நூலகங்களும் மதிப்புமிக்கப் பயன்பாட்டை உடையது. 52 வகுப்பறை நூலகங்களை அமைத்திருக்கிறோம்.

நான் இந்த நூலகத்தை அமைத்தபோது,

“கதைப் புத்தங்கள் படிப்பதில் குழந்தைகளிடையே எழுந்த அளவற்ற உற்சாகத்தைப் பார்த்தேன். ஒவ்வொருவருக்கும் புத்தங்களைச் சத்தமாகப் படிக்கிற வாய்ப்பை வழங்கியபோது, அனைவரும் ஆர்வத்துடன் முன்வந்து படித்ததோடு மட்டுமல்லாமல், பிறர் படிக்கையில் பெருமையுடன் கவனித்தனர். இப்படியொரு அனுபவத்தை இதற்கு முன்னால் கண்டதில்லை” என்கிறார் குறிப்பிட்ட சமூகத்திற்கான கல்விப் பணிகளைச் செய்யும் ஒரு சமூகக் கல்வியாளர்.

நவ் சாயோக் அறக்கட்டளையின் முதன்மைச் செயல்திட்டங்களில் கதை சொல்லலும் ஒன்று, அதன்படி ஒவ்வொரு சனிக்கிழமையிலும் ஒருமணி நேரம் கதை சொல்லல் நடைபெறும். ஒவ்வொரு கிராமத்திலும் இதற்காக ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் ப்ரதம் புக்ஸின் பல்வேறு நிலையிலான குழந்தைகள் புத்தகங்கள் கொண்டு கதைகள் சொல்கிறார். கர்நாடகா, தமிழ்நாடு, நாகாலாந்து ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 300 கிராமங்களில் 9000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த அறக்கட்டளையால் பயன்பெறுகின்றனர்.

திங்ஷார்ப் அறக்கட்டளையின் புக் மித்ரா திட்டம் மூலம் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூலகத்திலும் இந்தி - மராத்தி மொழிகளில் பல்வேறு வகைமைகளில் அமைந்த ப்ரதம் புக்ஸின் புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன. புக் மித்ரா திட்டத்திற்காக 36,000 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இண்டிவில்லேஜ் அறக்கட்டளை, தொடக்கநிலையில் குழந்தைகளுக்கு ஏற்படும் கற்றல் இடைவெளியைக் கதை சொல்லிக் கற்பிக்கும் முறை மூலம் சீர்ப்படுத்த ஒவ்வொரு சனிக்கிழமையும் கதை சொல்லும் நிகழ்வை நடத்திவருகிறது. ‘வகுப்பறையில் ஒரு நூலகம்’ திட்டத்தில் 35 சிறு நூலகங்கள் அமைத்து, 6218 குழந்தைகளுக்கு உதவியிருக்கிறது இவ்வமைப்பு.

“நாங்கள் பணியாற்றும் பள்ளிகளில் நூலக நாளைக் கொண்டாடியபோது, கதைப்புத்தகங்களைக் கையில் வாங்கியதும் குழந்தைகள் கண்களில் தெரிந்த உற்சாகமும் மலர்ச்சியும் எங்களை பிரமிக்க வைத்தன. எங்கள் முயற்சிகள் இச்சமூகத்தில் குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்று இத்தகைய நிகழ்வுகள் பறைசாற்றுகின்றன. எங்களோடு இணைந்து இயங்கும் ப்ரதம் புக்ஸின் பணிகளை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். கிராமப்புற இளம் மாணவர்களை வலிமைப்படுத்தும் பணியில் தொடர்ந்து செயலாற்ற ஆவலுடன் இருக்கிறோம்” என்று இண்டிவில்லேஜ் அறக்கட்டளை குழு தெரிவித்தது.

ஒடிஷாவில் இயங்கும் CINI அமைப்பு ரயாகடா மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளிகளிலும் அங்கன்வாடிகளிலும் நூலகங்களை அமைத்திருக்கிறார்கள். நாங்கள் CINI உடன் இணைந்து 57 ஆயிரம் குழந்தைகளுக்கு உதவும் வகையில் ஒடியா, குய் ஆகிய மொழிகளில் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை வழங்கியிருக்கிறோம். பழங்குடி மொழியான குய் மொழியில் குழந்தைகளுக்கான புத்தகம் என்பது மிகவும் அரிது. அந்தவகையில் இது எங்களுடைய முக்கியமான முயற்சி.

ப்ரதம் கல்வி அறக்கட்டளையின் சத்தீஸ்கர் கிளை, அம்மாநிலத்தில் 4 தொகுதிகளுக்கு உட்பட்ட 430 கிராமங்களில் நூலகங்களை அமைத்துள்ளது. இதன்மூலம் 10 ஆயிரம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

டாடா அறக்கட்டளையின் துணை அமைப்பான நுண் நிதி மையம் ராஜஸ்தான் மாநிலத்தை மையமாகக் கொண்டு செயல்படும் இலாப நோக்கற்ற அமைப்பாகும். அதன் ‘நூலக வளங்கள் திட்டம்’ மூலமாகப் பல குழந்தைகளுக்குக் கதைப்புத்தங்கள் கிடைப்பது எளிதாக இருக்கிறது. இத்திட்டத்தின் கீழான

கதைப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்களையும் நூலக நடவடிக்கைகளையும் குழந்தைகள் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த முன்னெடுப்புக்கு ஆதரவளித்து ப்ரதம் புக்ஸ் 23,000 புத்தகங்களை வழங்கியுள்ளது.

“எங்கள் வகுப்பறைகளில் ஒன்றை நூலகமாக மாற்றி, சுழற்சி முறையில் ஒவ்வொரு வகுப்பையும் ஒரு நாள் முழுவதும் நூலகத்தில் செலவிடச் செய்கிறோம். மேலும், தினமும் காலைக் கூட்டத்தில் நான் இரண்டு கதைகளைச் சொல்கிறேன். குழந்தைகளும் தற்போது அதை வலியுறுத்துகிறார்கள். தலைமை ஆசிரியர் திருமதி. அர்ச்சனா சிங் அவர்களின் ஆதரவே இதற்கு முக்கியக் காரணம்” என்கிறார் சவாய் மாமோபூர் மாவட்டம், கர்மோடா கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நூலகராகப் பணிபுரியும் நிகார் கானும்.

எங்களின் முக்கிய நிறுவன வாடிக்கையாளர்களில் சிலர்:

ரூம் டு ரீட் இந்தியா அறக்கட்டளை, பிரதம் கல்வி அறக்கட்டளை, அஸிம் பிரேம்ஜி மேம்பாட்டு அறக்கட்டளை (Azim Premji Foundation for Development), டிமார்ட் அறக்கட்டளை, இந்திய எழுத்தறிவு திட்டம் (India Literacy Project), எச்.ஸி.எல் அறக்கட்டளை, யுனைட்டட் வே, நவ் சயோக் அறக்கட்டளை, திங்க் ஷார்ப் அறக்கட்டளை, சினி அமைப்பு (CINI), பாரதி அறக்கட்டளை, புக்ஸ் ஃபார் ஆல் டிரஸ்ட், நுண் நிதிய மையம் (Center for Microfinance), லேர்னிங் லிங்ஸ் அறக்கட்டளை (Learning Links Foundation), அஸ்பையர், கோடாக் கல்வி அறக்கட்டளை, ராமன் கண்ட் முன்ஜல் அறக்கட்டளை, அத்யாயன் குவாலிட்டி எடுகேஷன் ஃபவுண்டேசன், தி ஜேசிபி லிட்டரேச்சர் ஃபவுண்டேசன், லீடர்ஷிப் ஃபார் ஸ்கில் எடுகேஷன் ஃபவுண்டேசன் (Leadership for Skill Education Foundation), இன்னும் சில.

முக்கிய அரசு வாடிக்கையாளர்கள்: ஜார்கண்ட் கல்வித் திட்டம், கும்லா (Jharkhand Shiksha Pariyojana, Gumla); ஒருங்கிணைந்த பழங்குடி மேம்பாட்டு நிறுவனம், பழங்குடியினர் நலத்துறை, உட்னூர் மாவட்டம், தெலங்கானா; ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம், தாதா - நாகர் ஹாவெளி, டாமன்& டையு.

முக்கிய விற்பனையாளர்கள்: கிங்மோர், மைண்ட்வொர்த், சம்ருத்தி எண்டர்பிரைஸஸ், லோகாயத் பிரகாஷன், லைட்ரூம் புக் ஸ்டோர், ஹிமாம்சு புக் டிபோட், ஃபன்கி ரெயின்போ, கிரியேடிவ் லேர்னிங் எய்ட்ஸ் (Creative Learning Aids), த்யான்ஜகர் (DNYANJAGAR), நந்தா எண்டர்பிரைஸஸ், அட்டா கலாட்டா, புக்வார்ம் லைப்ரரி, யுரேகா புக்ஸ், கஹானி ட்ரீ, டிரையாலஜி, இன்னும் சில.

முக்கியப் பள்ளிகள்: அமிதி பன்னாட்டுப் பள்ளி, தில்லி பப்ளிக் பள்ளி, தி ஹெரிடேஜ் பள்ளி, விமானப்படை பள்ளி, சன்பீம் லஹர்தரா (Sunbeam Lahartara), மதர்ஸ் ப்ரைட் (Mother’s Pride), சேத் எம்.ஆர். ஜெய்பூரியா பள்ளி, அம்ரிதா வித்யாலயம், குருகுல் பள்ளி, மற்றும் பல.

படம் 1 & 2: ராஜஸ்தானில் CARITAS இந்தியாவால் ஒருங்கிணைக்கப்பட்ட பெற்றோருடனான சேர்ந்து வாசிக்கும் கதை நிகழ்வுகள்

படம் 3: *நூலக வகுப்பில் புத்தகங்களைப் பார்க்க ஆர்வமாக இருக்கும் குழந்தைகள்*

படம் 4: *ASPIRE ஒருங்கிணைத்த நூலக வாசிப்பு நிகழ்வில் கதை வாசிக்கும் மாணவி*

படம் 5: *இண்டிவில்லேஜ் ஃபவுண்டேஷன் ஒருங்கிணைப்பில் கர்நாடகாவின் ராய்ச்சூரிலும் ஆந்திராவின் யேம்மிகானூரிலும் கதை வாசிக்கும் குழந்தைகள்*

வாசகர்களை உருவாக்குதல், குடிமக்களை உருவாக்குதல்

புத்தகங்களை உருவாக்கும் பரவலாக்கம் செய்யவும் நன்கொடையாளர்களின் தொடர் பங்களிப்பு உதவியிருக்கிறது. அவர்கள் தரும் நிதி மூலம், இந்தியாவின் சிறந்த கலைஞர்களைக் கொண்டு நம்மால் இன்னும் அதிகம் கதைகளை வெளியிட முடியும். மொழிபெயர்ப்புத் திட்டங்களை விரிவுபடுத்துவதன் வழியாக, வெளிநாடுகளில் வாழும் குழந்தைகளிடமும் நம் புத்தகங்களைக் கொண்டு சேர்க்க முடியும். இன்றைய வாசகரே நாளைய பொறுப்புள்ள, சிந்தனையுள்ள குடிமக்கள். இதை நிறைவேற்றும் வகையில், நன்கொடையாளர்களின் உதவியோடு நமது புத்தகங்கள் மேலதிக வாசகர்களை நோக்கித் தமது சிறகுகளை விரிக்கும்.

50 புத்தக உருவாக்க பங்குதாரர்கள்

2,500 ஸ்டெம் நூலகங்கள் மகாராஷ்டிராவில்

1,200 பள்ளிகளில் கோவா இஸ் ரீடிங் திட்டம் முடிவுற்றது

200 நூலகங்கள் பழங்குடி மொழிகளில்

மும்பை மாநகராட்சிப் பள்ளிகளிலும், சத்ரபதி சாம்பாஜி நகரில் உள்ள ஸில்லா பரிஷத் பள்ளிகளிலும் 2500க்கும் மேற்பட்ட STEM நூலகங்களை அமைக்க காட்டர்பில்லர் (Caterpillar) நிறுவனம் உதவியுள்ளது. இது இந்த ஆண்டில் எங்களுக்குக் கிடைத்த பெரிய நன்கொடை. 3 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் இதனால் பலனடைந்துள்ளனர்.

கோயம்புத்தூரின் காரமடை பகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில் யுஎஸ்டி உலக நல அறக்கட்டளை (UST Global Welfare Foundation) உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கும் 100 நூலகங்கள், தரமான கல்வி வளங்கள் கிடைப்பதை விரிவுபடுத்தியுள்ளது.

கிராமப்புற மாணவர்களுக்குப் புத்தகங்கள் எளிதில் கிடைத்திட பெங்களூரு, ஆனேகல் பகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில் 185 நூலகங்கள் அமைப்பதற்கான நிதியை காஷிஃபை காமர்ஸ் இந்தியா (Cashify Commerce India) நிறுவனம் அளித்தது.

கிளவ்தெரா தரவு தளத்தோடு (Cloudera Data Platform, India) இணைந்து பெங்களூருவில் உள்ள அரசுப் பள்ளிகளில் 93 நூலகங்களை அமைத்துள்ளோம்.

அஸாம், சத்தீஸ்கர், குஜராத் பகுதிகளில் நூலகங்களை அதிகப்படுத்தவும் சிறார் இலக்கியத்தை வளப்படுத்தவும் தனது டோர்பீன் (DoorBeen) முன்முயற்சி மூலம் குழந்தைகள் புத்தகங்களை உருவாக்கி, மொழிபெயர்த்து, விநியோகம் செய்யும் பணிகளுக்கு எச்.டி.பாரெக் அறக்கட்டளை ஆதரவளித்தது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எங்களோடு இணைந்து தெலங்கானாவில் 200 நூலகங்களை அமைக்க என்ஃபேஸ் சோலார் எனர்ஜி நிறுவனம் (Enphase Solar Energy) உதவி புரிந்தது.

பி.ஏ.என்.ஐ அறக்கட்டளை (P.A.N.I Foundation), 2012ஆம் ஆண்டிலிருந்து எங்ளோடு இணைந்து பல்வேறு மொழிகளில் புதிய புத்தகங்களை உருவாக்க உதவியுள்ளது. இந்த ஆண்டும் 5 மொழிகளில் 3 புதிய புத்தகங்கள் இணைந்து வெளியிட்டிருக்கிறோம்.

2012இலிருந்து இணைந்து பணியாற்றும் எங்கள் மதிப்புமிகு பங்குதாரரான டாடா அறக்கட்டளையின் துணையுடன் மராத்தி, கன்னடம், ஆங்கிலம் ஆகியவற்றில் 6 மொழி-முதல் புதிய புத்தகங்களை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் 30,000 பிரதிகள் அச்சிட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கியிருக்கிறோம்.

2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தி இண்டஸ் டவர்ஸ் திட்டமானது (The Indus Towers Project), ஆங்கிலம், மராத்தி, கொங்கனி ஆகிய மொழிகளில் இணைய வாசிப்புத் திட்டம்; 'வகுப்பறையில் ஒரு நூலகம்' திட்டத்தைப் போன்ற வாசிப்பிடங்களை உருவாக்குவது என்ற இரு நிலை முன்னெடுப்புகள் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் வாசிப்புக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் நோக்கிலான 'கோவா வாசிக்கிறது' (Goa is Reading) திட்டம் வழியாக உயர்நிலையை அடைந்துள்ளது.

இத்திட்டம் 1,200 பள்ளிகளைச் சென்றடைந்து, 78,800 மாணவர்களுக்கு 2,01,600 புத்தகங்களை அளித்துள்ளது. ஆசிரியர் பயிற்சி - திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியவற்றின் துணையோடு இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட பன்மொழி புத்தகங்கள் - செயற்பாடுகள் தொகுப்பை வழங்கியுள்ளது. வாசிப்பின்பத்தைத் தூண்டும் புத்தகங்கள் - டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தி கல்வியாளர்களையும் மாணவர்களையும் ஈர்ப்பதில் இத்திட்டம் வெற்றியடைந்துள்ளது.

படம் 1: *பெங்களூரின் அனேகல் பிளாக்கில் அரசுப் பள்ளிகளில் ப்ரதம் புக்ஸ் நூலகங்கள்*

படம் 2: *குஜராத்தின் வான்கலில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வாசிப்பின் மகிழ்ச்சியைத் தரும் நூலகம்*

படம் 3: *அசாமின் நாகாவ்ன் மாவட்டத்தில் புதிய வகுப்பறை நூலகங்களோடு கதா கானான் நூலகக் குழந்தைகள்*

படம் 4: *அசாமின் ஸ்னெஜோரி மாவட்டத்தில் ப்ரதம் புக்ஸ் நூலகங்களை ஆர்வமாகப் பெற்றுக்கொள்ளும் குழந்தைகள்*

ப்ரதம் புக்ஸின் இருபது ஆண்டுகளைக் கொண்டாடுதல்

ஒவ்வொரு குழந்தையின் கையிலும் ஒரு புத்தம் வழங்க வேண்டும் என்ற இலக்கோடு ப்ரதம் புக்ஸ் 2004 ஜனவரியில் குழந்தைகள் பதிப்பகமாகத் தனது பயணத்தைத் தொடங்கியது. “குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை / வாசிப்பின்பத்தை ஜனநாயகப்படுத்த வேண்டும் என நாங்கள் நினைத்தோம். சிறந்த, பன்முகப்பட்ட புத்தகங்களை, வாய்ப்புள்ள இடங்களில் நாட்டுப்புற கதைப் புத்தகங்களை எல்லா மொழிகளிலும் உருவாக்க வேண்டும் என்று நினைத்தோம். அதைச் செய்தும் இருக்கிறோம்” என்கிறார் எங்கள் நிறுவனர் ரோஹிணி நிலேகனி.

அர்ப்பணிப்பின் இருபது ஆண்டுகள்

இருபது வருடங்களாக, உலக அளவில் குழந்தைகளிடையே துடிப்பான வாசிப்புச் சூழலை உருவாக்குவதே எங்களின் நிலைத்த நோக்கமாகும். “எங்கள் *எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஓவியர்கள், கல்வியாளர்கள், நூலகர்கள், பெற்றோர்கள், நன்கொடையாளர்கள்,* வாசக அன்பர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு - ஆர்வம் - படைப்பாற்றலால் இந்தப் பயணம் வலிமை பெறுகிறது.”

எங்கள் புத்தகப் பட்டியலே எங்களின் வெற்றிக்கான ஆவணம். “2004இல் முதன்முதலில் நாங்கள் வெளியிட்ட புத்தகங்கள் குறைந்தபட்சம் பத்து பதிப்புகளாவது கண்டிருக்கும். ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு அவைதாம் அவர்களின் முதல் புத்தகங்கள். எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய வகையில் நாங்கள் அவற்றை 5 ரூபாய்க்கு விற்பனை செய்தோம்” என்று நினைவுகூர்கிறார் இணை நிறுவனர் அசோக் காமத்.

கதைகள் மூலம் தடைகளை உடைத்தல்

ப்ரதம் புக்ஸின் பன்மொழி-உள்ளடக்கிய பார்வையானது இலட்சக்கணக்கான குழந்தைகளுக்குப் புத்தகங்களைக் கொண்டு சேர்த்திருக்கிறது. சிந்தனையைத் தூண்டக் கூடிய கதைப் புத்தகங்கள், வகுப்பறை நூலகங்கள் ஆகியவை வழியாக குக்கிராமங்கள், மலைப் பகுதியிலுள்ள பள்ளிகள், பழங்குடிச் சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வாசிப்பு இன்பத்தை அளித்திருக்கிறோம்.

“பன்மொழியில், குறைந்த விலையில், எளிதாகக் கிடைக்கக் கூடிய வகையில் புத்தகங்களை வெளியிடும் முன்னோடி பதிப்பகமாக ப்ரதம் புக்ஸ் இருக்கிறது. உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான குழந்தைகள் நம் புத்தகங்களை இப்போது இலவசமாக வாசிக்க முடியும்.” என்றார் எங்கள் பொருளாளர் சூசன் சிங்.

இத்தகைய புதிய முயற்சிகள் இதோடு நின்றுவிடாது. எங்களின் டிஜிட்டல் மளமான ஸ்டோரிவீவர், உலக அளவில் புத்தகங்களக் கொண்டு சேர்த்திருக்கிறது. “நல்ல விஷயங்களுக்காகத் தொழிற்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும் என்பதைத் தொடக்கத்திலேயே நாங்கள் கண்டறிந்திருந்தோம்” என்று குறிப்பிடுகிறார் இணை நிறுவனர் ரேகா மேனன். இன்று, கற்றல் செயற்பாடுகளில் உள்ள தடைகளைத் தகர்த்து பல்வேறு மொழிகளில் இலட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்டுள்ளது ஸ்டோரிவீவர் தளம்.

வாசிப்பின் மூலம் வாழ்க்கையை மாற்றுதல்

கற்பனைகளைத் தூண்டி, அன்பை வளர்த்து, வாசிப்பு மீதான நீடித்த ஈர்ப்பை உருவாக்கி என கதைப் புத்தகங்களின் ஆற்றலை இருபது ஆண்டுகளாகப் பார்க்கிறோம்.

“எங்கள் நோக்கத்தைச் சாத்தியமாக்கிய எழுத்தாளர்கள், ஓவியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், தன்னார்வலர்கள், பங்குதாரர்கள், நன்கொடையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். உலக அளவில் குறைந்த வசதிகள் கொண்ட, வசதிகளற்ற குழந்தைகளைச் சென்றடைந்ததற்கு உங்கள் பங்களிப்புகளே காரணம்” என்று நன்றி தெரிவித்தார் நிறுவனத் தலைவர் ஆர்.ஸ்ரீராம்.

விழுமியங்களில் வேரூன்றியிருக்கும் எதிர்காலம்

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் மாறிக்கொண்டிருக்கும்போது, நமது அடிப்படை கூறுகள் உறுதியாக இருக்கின்றன: நோக்கம், மதிப்பீடுகள், புதுமைக்கான அர்ப்பணிப்பு.

கூட்டு முயற்சி, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, படைப்பாற்றல், அன்பு ஆகியவற்றின் பக்கம் ப்ரதம் புக்ஸ் தொடர்ந்து நிற்கும். புத்தகங்களின் உருமாற்றும் திறனை அனுபவிக்காத குழந்தையே இல்லை என்ற நிலையை அடையும் பயணத்தில் நாம் இணைந்து செயலாற்றுவோம்.

நன்கொடையாளர்கள்

Azim Premji University

P·A·N·I Foundation
giving hope a chance

[e] enphase ENERGY

KEMIN
Compelled by Curiosity™

unicef
for every child

UST

indus TOWERS

Vereint für eine bessere Zukunft
Nitya Bal Vikas Deutschland e.V.

H T Parekh FOUNDATION

TATA TRUSTS

CLOUDERA

நன்கொடையாளர்கள்

Adhyayan Quality Education Foundation

ASHAJYOTHI USA INC

Bright Fund

Education Above All (EAA)

Education Initiatives Private Limited

Fidelity Asia Pacific Foundation

Give Foundation

Give Foundation Inc, USA

JASMIN INFOTECH PRIVATE LIMITED

King Baudouin Foundation

Caterpillar India Engineering Solutions Private Limited

Liferarian Association

Navneet Foundation

NDR InVit Managers

Persistent Foundation

Sauramandala Foundation

Shopify Commerce India Private Limited

The Online Giving Foundation

UCatapult Foundation

UK Online Giving Foundation

United Way Bengaluru

2023–2024 தனிநபர் கொடையாளர் பட்டியல்

வாசிப்பின் மகிழ்ச்சியைப் பரப்புவதில் எங்கள் முயற்சிகளோடு கைகோர்க்க விரும்பினால் இம்மின்னஞ்சலுக்கு எழுதவும் grants@prathambooks.org

நிதி அறிக்கைகள்

Pratham Books

Balance sheet as at March 31, 2024

(Amount in Rupees)

Particulars	Sch No.	As at March 31, 2024 Amount	As at March 31, 2023 Amount
Liabilities			
Corpus Fund	1	11,47,17,119	10,11,68,543
Specified Fund	2	73,66,019	5,03,01,352
Current Liabilities	3	1,60,15,456	1,55,66,256
Provisions	4	46,26,718	41,07,473
Other advances	5	21,65,806	6,20,586
Total		14,48,91,118	17,17,64,209
Assets			
Fixed Assets	6	19,80,392	24,41,933
Deposits	7	8,46,43,096	9,63,56,774
Debtors	8	34,70,991	29,94,427
Loans and advances	9	23,06,917	10,57,771
Stock of Books		83,22,808	63,93,640
Cash in Hand		13,762	13,440
Cash at Bank	10	4,44,69,456	5,59,18,084
Specified Fund Receivable	11	1,30,000	2,60,003
Other Current Assets	12	3,31,696	63,29,737
Total		14,48,91,118	17,17,64,209
Significant Accounting Policies and notes to accounts	30		

for Pratham Books

R Sriram
Chairperson

Suparna Singh
Trustee

Bengaluru
September 20, 2024

As per our report of even date
for Singhvi Dev & Unni LLP
Chartered Accountants
Firm Reg No 003867S/S200358

Shashi Kumar H D
Partner
Membership No.: 235431
UDIN: 24235431BKEMXC5342

Bengaluru
September 20, 2024

Pratham Books

Income & Expenditure for the year ended March 31, 2024

(Amount in Rupees)

Particulars	Sch No.	As at March 31, 2024 Amount	As at March 31, 2023 Amount
Income			
Sale of Books	13	8,78,87,401	7,22,51,678
Donations received	14	59,15,192	79,73,670
Other Income	15	87,22,965	76,56,613
Income from Funds	16	4,48,99,969	7,96,43,198
Total (A)		14,74,25,727	16,75,25,159
Expenditure			
Book Development Expenses	17	2,91,23,267	2,80,32,882
Selling & Administrative Expenses	18	2,27,51,805	1,94,58,435
Staff Expenses	19	3,69,18,922	2,47,53,402
Promotional Expenses	20	2,47,544	3,94,861
Depreciation	6	5,97,825	4,37,604
Fund Expenditure	21	8,67,17,139	10,06,12,911
Total (B)		17,62,96,500	17,38,90,094
Excess of Income over expenditure (A-B)		(2,88,70,773)	(63,64,935)
Add:			
Opening Balance in Funds			
Opening Balance in Corpus Fund		10,11,68,543	8,55,63,766
Opening Balance in Specified Fund		5,03,01,352	7,17,35,207
Balance of Funds after appropriations			
Corpus Fund		11,47,17,120	10,11,68,543
Specified Fund		73,66,019	5,03,01,352
Total balance in Funds		12,20,83,139	15,14,69,895
Significant Accounting Policies and notes to accounts	30		

for Pratham Books

R Sriram
Chairperson

Suparna Singh
Trustee

Bengaluru
September 20, 2024

As per our report of even date
for Singhvi Dev & Unni LLP
Chartered Accountants
Firm Reg No 003867S/S200358

UDIN: 24235431BKEMXC5342

Shashi Kumar H D
Partner
Membership No.: 235431
UDIN: 24235431BKEMXC5342

Bengaluru
September 20, 2024

நிதி அறிக்கைகள்

Pratham Books

Receipts and Payments account for the year ended March 31, 2024

(Amount in Rupees)

Particulars	Sch no.	Year ended March 31, 2024 Amount	Year ended March 31, 2023 Amount
Receipts			
Balance brought forward			
- Cash on hand		13,640	8,740
- Cash at bank		3,09,18,084	5,56,29,623
Sale of books	22	8,98,95,914	7,60,21,404
Donations	23	89,18,192	79,73,670
Other income	24	57,68,936	46,96,420
Specified Funds	25	4,68,22,889	7,95,20,218
Fixed Deposits - Withdrawn		19,03,31,224	11,57,34,894
Gratuity Fund (LIC)		1,42,213	-
Earnest Money Refund Received		-	72,141
Income Tax Refund - Received (TDS)		-	15,20,281
Total		40,38,08,872	34,29,72,296
Payments			
Book Development Expenses	26	3,68,14,910	3,06,72,715
Selling, Administrative Expenses and Promotional Expenses	27	3,23,51,149	1,97,55,001
Staff Expenses	28	3,94,13,621	3,35,82,766
Fund Expenditure	29	9,14,40,264	9,88,75,433
Fixed Assets Purchased		3,06,960	8,27,933
Fixed Deposits		18,76,17,047	11,13,88,813
Gratuity- LIC Policy		10,00,000	13,14,641
Specific Grant Balance Refund		1,75,502	7,24,246
Earnest Money/Security Deposit		-	61,000
Balance carried forward			
- Cash on hand		15,763	13,640
- Cash at bank		4,44,69,456	3,09,18,084
Total		40,38,08,872	34,29,72,296

Significant Accounting Policies and notes to accounts 30

for Pratham Books

Chairperson

Suparna Singh
Trustee

Bengaluru
September 20, 2024

UDIN: 24235431BKEMXC5342
As per our report of even date
for Singhvi Dev & Unni LLP
Chartered Accountants
Firm Reg No 003867S/S200358

Shashi Kumar H D
Partner
Membership No.: 235431
UDIN: 24235431BKEMXC5342

Bengaluru
September 20, 2024

அறங்காவலர் குழு

பெயர்	பதவி	கலந்துகொண்ட ஆலோசைக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை	அறங்காவலர்கள் /சன்மானம் ஈடுசெய்யப்பட்ட செலவு
1. அசோக் காமத்	அறங்காவலர்	4	ஏதுமில்லை
2. ஹரித் நாக்பால்	அறங்காவலர்	3	ஏதுமில்லை
3. மீனாக்ஷி ரமேஷ்	அறங்காவலர்	1	ஏதுமில்லை
4. எம்.எஸ். ஸ்ரீராம்	அறங்காவலர்	3	ஏதுமில்லை
5. பெர்வின் வர்மா	அறங்காவலர்	2	ஏதுமில்லை
6. ஸ்ரீகாந்த் நாதமுனி	அறங்காவலர்	2	ஏதுமில்லை
7. சுசேன் சிங்	அறங்காவலர்	3	ஏதுமில்லை
8. ஆர். ஸ்ரீராம்	தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர்	4	ஏதுமில்லை

அறங்காவலர்கள் வழக்கமான நிர்வாக கூட்டங்களுக்கு அப்பால், வருடம் முழுக்க அமைப்பின் பல்வேறு செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். அவற்றில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள்.

அசோக் காமத், இணை நிறுவன அறங்காவலராக, ஆரம்பம் முதலாகவே ப்ரதம் புக்ஸின் முக்கியமான பகுதியாக இருக்கிறார். அக்ஷரா அமைப்பை வழிநடத்துகிறவர். இந்தியாவில் நிலவும் கல்விசமத்துவமின்மைக்கு எதிராக ஆழமான உறுதிப்பாட்டுடன் செயல்படுகிறவர். வளர்ச்சி மாற்றத்துக்கான நிலையான மாதிரிகளை கட்டமைப்பதிலும் பரவலாக்குவதிலும் அக்கறை கொண்டிருக்கிறார். மாநிலத் தலைமையிலிருந்து அடித்தளம் வரை, அரசாங்கத்தின் எல்லாத் துறைகளுடனும் எப்படி இணைந்து செயல்பட வேண்டும் என்பதை அசோக் புரிந்து வைத்திருக்கிறார்.

ஹரித் நாக்பால், இந்தியா முழுக்க செயல்பட்ட அனுபவம் உடையவர். தன் அனுபவத்தையும் மையவோட்ட தொழில் பார்வைகளையும் நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். கள யதார்த்தங்களுடனும் பயனாளர்களின் கருத்துக்களுடனும் நம் பார்வைகள் இசைந்திருக்கவும், நம் செயல்திட்டத்தை பரவலாக்கவும் உதவியாக இருக்கிறார்.

பர்வீன் வர்மா சி.ஆர்.ஒய் அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்து குழந்தைகளின் தேவைகளுக்காக பணியாற்றி வருகிறார். குழந்தைகளின் தேவைகள் பற்றிய புரிதல் கொண்டவர். அது சார்ந்த பரிவுணர்ச்சி உடையவர். குழந்தைகளை சென்றடைய ஏற்படுத்த உள்ளடக்கம் வழியாகவும் நுட்பமான பார்வைகள் வழியாகவும் அவர் உதவி புரிகிறார்.

ரேகா மேனன் எங்களது நிறுவனர்களில் ஒருவர். கார்ப்பரேட் நிறுவனம் போல ஒழுங்கமைத்தல், அதேநேரம் நோக்கத்துக்காக செயல்படுதல் இரண்டையும் ஒன்றிணைக்கிறார். பெரிய நோக்கங்கள், விரிவான தாக்கம் ஆகியவற்றில் கவனம்.

எம்.எஸ்.ஸ்ரீராம் கல்வியாளர். எழுத்தாளர். அறக்கட்டளையின் நடைமுறைகளை மேலாண்மை செய்கிறார். திட்ட வடிவம் மற்றும் கருத்துரீதியான சிக்கல்கள் இரண்டையும் திறம்பட கையாள்கிறார்.

ஸ்ரீகாந்த் நாதமுனி தன்னுடைய ஆழமான தொழில்நுட்ப அறிவை எப்படி பாதுகாப்பாக குழந்தைகளுக்கு ஏற்றாற்போல பயன்படுத்தலாம் என்று பகிர்ந்து உதவுகிறார். முன்-களங்களில் செயலாற்றியிருக்கிறார். தொழில்நுட்பத்தின் புதுயுக சாதனங்களின் எல்லா கூறுகள் பற்றியும் தெளிவு பெற முதலில் தேடப்படுகிற அறங்காவலராக இருக்கிறார்.

சுசேன் சிங் பல ஆண்டுகளாக தலைவராகவும் நிர்வாக அறங்காவலராகவும் அமைப்பை வழிநடத்தியிருக்கிறார். ஸ்டோரிவீவர் தளத்தை உருவாக்கி பரவலாக்கியவர். பல புதிய முன்னெடுப்புகள் செய்தவர். சிதறாத கவனம் கொண்டவர். நுட்பமான சிறு தகவல்களையும் கவனிப்பவர். அழகியல் சார்ந்து சிறந்த பார்வை உள்ளவர். மகிழ்ச்சியான புத்தகங்கள், கடைசி குழந்தைவரை போய் சேரவேண்டும் என்பதில் தீவிரமான ஆர்வம் உள்ளவர்.

ஆர். ஸ்ரீராம் புத்தகங்களின் மாயம் சார்ந்தும் வாசிப்பின்பத்தை ஜனநாயகப்படுத்துவது சார்ந்தும் தீவிரமான ஈடுபாடு கொண்டுள்ளார். தொழில்முனைவோராக துணிச்சலான கொள்கைகளுடைய வெவ்வேறு தொழில்களுடனும், லாப நோக்கில்லாத வெவ்வேறு அமைப்புகளுடனும் பணியாற்றிய அனுபவத்தையும் அதன் வழியே பெற்ற நுட்பமான பார்வைகளையும் நம்மிடம் பகிர்கிறார். தற்போது தலைவராகவும் நிர்வாக அறங்காவலராகவும் இருந்து, தலைமைக் குழுவை திறம்பட வழிநடத்துகிறார்.

படங்கள்

புத்தகம்	ஓவியர்	ஆசிரியர்
பர்சா பாதல்	தஸ்னீம் அமீருதீன்	சஞ்சீவ் ஜெய்ஸ்வால் ‘சஞ்சய்’
மாசே ஜவல்சே மித்ரா	ரிஷப் பன்ஸ்கர்	ரமா ஹர்தீகர்-சகதீயோ
வாட் டஸ் அனு சீ?	லாவண்யா கார்த்திக்	லாவண்யா கார்த்திக்
புச்குவுக்கு ஒரு புத்தகம்	ராஜீவ் ஐப்	தீபாஞ்சனா பால்
நாணம்மாள் அண்ட் கமலாத்தாள்: டிராவல் பை சீ	சுஷாந்த் அஹிரெ	மேனகா ராமன்
பாரிஷ் மேன் கியா காயேன்	ராஜீவ் ஐப்	மாலா குமார் & மனிஷா சௌத்ரி
பாக்பிரெல்லா	ஐத்தியா அஷோக் குமார்	ஐத்தியா அஷோக் குமார்
மஞ்சள் குடை	பூஜனா பிரசன்னா	பூஜனா பிரசன்னா
மீராவும் அமீராவும்	லாவண்யா நாயுடு	நிம்மி சாக்கோ
ஹாட் டீ அண்ட் வார்ம் ரக்ஸ்	ப்ரியா குரியம்	மாலா குமார் & மனிஷா சௌத்ரி
டினேவும் தூரத்து மலையும்	ஓகின் நயம்	ஷிகா திரிபாதி
முஃப்தி கி குல்ஃபி	அலன்கிரிதா அமயா	அலன்கிரிதா அமயா
விண்வெளி விதிகள்	கனாட்டோ ஜிமோ	அபர்ணா கபூர் & பிஜல் வச்ராஜனி
இன்று நான்	சந்தியா பிரபாத்	வர்ஷா சேஷன்
குண்டு கரடிக்குட்டி மிங்-மிங்	ரோஷ்	அபர்ணா கபூர்
ராஜ்மோஹனா கெலோத்: த பக் ஃபைண்டர் அண்ட் ஹெர் வேர்ல்ட் ஆஃப் டைனி இன்செக்ட்ஸ்	ஜோவானா தவலா	ஷ்வேதா கணேஷ் குமார்
ஆலேபாக்	சித்தி வர்தக்	வசீம்பார் மனேர்

ப்ரதம் புக்ஸ் குழந்தைகள் தங்கள் தாய்மொழியில் வாசிப்பின் மகிழ்ச்சியை பெறவேண்டி பல்வேறு மொழிகளில் புத்தகங்களை உருவாக்குகிறது. ஒவ்வொரு முறை ஒரு குழந்தை தனது தாய்மொழியில் புத்தகத்தை எடுத்துப் பார்க்கும்போது அங்கே உற்சாகம் பரவுகிறது. இந்த அனுபவங்களால் ஊக்கம்பெற்று இந்த ஆண்டறிக்கையின் வடிவமைப்பு இந்தியாவின் பல்வேறு மொழிகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் புத்தகங்கள் பதிப்பித்துள்ள வெவ்வேறு இந்திய மொழிகளின் எழுத்துகளைக் கொண்டு இதன் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

Pratham Books

#621, 2nd floor, 5th Main, OMBR Layout,
Banaswadi, Bengaluru 560043
T: +91 80 42052574 / 41159009
New Delhi | T: +91 11 41042483

www.prathambooks.org
www.storyweaver.org.in
www.donateabook.org.in